முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இராமதேவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.02.2019, திங்கட்கிழமை

1. **யோகசித்தே அரங்கா போற்றி**
**உயர் ஞானியே தவசியே போற்றி**
**வகைபட தானதரும வழியை**
**வல்லமைபட மக்களுக்கு காட்டி**

2. காட்டியே கருணை புரிகின்ற
கலியுக மாதவ அரங்கனே
வாட்டமற உன் வழிக்கு வர
வையகமே ஞானயுகம் ஆகும்

3. ஆகுமென உயர்நிலை கூறி
அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
வகைபட **விளம்பி சால் திங்கள்**
**வரமென சஷ்டிதிகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 6ம் நாள் 18.02.2019, திங்கட்கிழமை)**

4. **வாரமதில் இராமதேவர் யானும்**
வழங்குவேன் உலகோர் நலமுற
பாரதம் எனும் புண்ணிய பூமி
பாருலகுக்கே ஞானம் போதிக்க இருக்க

5. இருக்கவே இனியும் காலம் தாழ்த்தா
எல்லா மக்களும் ஒன்றிணைந்து
கருத்தாக முருகப்பெருமானின்
கண்ணியமான ஞான வழிகளை

6. வழிகளை ஏற்று வருதலுற
வணங்கி தான தருமம்பட
அழியாமை தரும் சுத்தநெறி
அரங்கன் சன்மார்க்க விதிப்படி

7. விதிப்படி நடந்து தொடர
வினை வெல்வதுடன் இனிமேலாக
விதிமுடிவு இடைகண்டம் மரணம்
வினைதரும் எதிர்மறை சக்திகள் கொடுமை

8. கொடுமை அணுகா வாழ்வும்
கொலை வெறி இல்லா உலகும்
நாடுமே அமைதிமிக்க சூழல்
நன்மைபட கலியுகமே தேறும்

9. தேறுமே அரங்கன் தயவால்
தேவைகள் பாரத பூமியில்
ஏறுமுகமாக பூர்த்தி கண்டு
எல்லையில் பாதுகாப்பு நிலை பெறும்

10. காப்புடனே இனி எவருக்கும்
கண்டம் துர்மரணம் அணுகா
மீட்பும் தெளிவும் திடமும்
முருகப்பெருமான் நாமம் சொல்ல கிட்டும்

11. கிட்டுமே கலி இடர் விலக
குருராசன் உயர்வழி வர வேணும்
திட்டமுடன் சிறப்பு கூடும்
தேசமே மேல்நிலை கூடும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் இராமதேவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

பலபல யோகங்களை செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி, உயர் ஞானம் வென்றிட்ட உயர் ஞானியே மகா தவசியே அரங்கா போற்றி போற்றி, முறைகளோடு தானதருமங்களைச் செய்து மேன்மையடைந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளலாம், தருமத்தின் மூலம் ஞானம் பெறலாம் என்றே மக்களுக்கு தர்மத்தின் வழிதனை தர்மத்தின் வல்லமைகளைக் காட்டி வழிநடத்தி கருணைபுரிகின்ற கலியுக மாதவனே அரங்கமகா தேசிகனே மக்கள் வாட்டம் இன்றி மகிழ்வோடு உமது ஞானவழியினை ஏற்று செயல்பட இந்த உலகமே ஞானஉலகமாக ஆகிடும் எனக் கூறியே உலகின் உயர்வுநிலைதனை எடுத்துரைத்து உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 6ம் நாள் 18.02.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே இராமதேவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் இராமதேவர்.

ஞானம்மிக்க பாரததேசம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வெளிப்பாட்டின் மூலம் உலகிற்கே ஞானம் போதிக்க இருக்கின்றதப்பா, ஆதலினால் உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் எல்லா மக்களும் ஒன்றிணைந்து கருத்துடன் முருகப்பெருமானின் கண்ணியம்மிக்க ஞானவழிகளை ஏற்று வாழ்வினில் கடைப்பிடித்திடுங்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மரணமிலாப் பெருவாழ்வை தந்தருளும் தூய ஞானநெறிகளை ஏற்று தானதருமங்களை தாராளமாய் செய்து அரங்கனின் சன்மார்க்க விதிப்படி வாழ்ந்து வர, அவரவர்களின் வினைகளை வெல்வதுடன் இனிமேலும் உங்களுக்கு துன்பம் இல்லாத வாழ்வு அமைந்து விதிப்படி, விதிமுடிவு, இடைக்கண்டம் மரணம் அவரவர் செய்திட்ட வினைகளால் எதிர்மறை சக்திகளின் கொடுமைகளுக்கு ஆளாகுதல் என கொடுமைகள் இதெல்லாம் அரங்கன் அருளால் மாறி கொடுமைகள் ஏதும் அணுகாத சிறப்பான வாழ்வும் அமைவதுடன் உலகமே அமைதியான உலகமாக ஆகி கொலை வெறிச்செயல் இல்லாத உலகமாக ஆகும். மக்களெல்லாம் தீமையான குணங்களில் இருந்து விடுபட்டு அமைதியான சூழலை நாடிடுவார்கள். உலகினில் அமைதிமிக்க சூழல் உருவாகி கலியுகம் உண்மையாகவே தேற்றம் அடைந்து ஞானயுகமாக ஆகிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்தயவால் பாரததேசமானது தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து தனது தேவைகளை நாடே பூர்த்தி செய்து கொண்டு தற்சார்புடைய நாடாய் விளங்கி எல்லையில் பாதுகாப்பும் பலம் பெற்று நிலையான பாதுகாப்புடைய தேசமாகும்.

முருகப்பெருமானின் அருளால் இனி எவருக்கும் அந்நிய சக்திகளால் வருகின்ற கண்டமும் துர்மரணமும் வராது. முருகப்பெருமானின் திருநாமங்களை மனம் உருகி சொல்ல சொல்ல கண்டங்கள் விலகும், துர்மரணம் வராது, மனத்தெளிவும் திடமும் உண்டாகிடும்.

**கலியுகத்தின் துன்பங்கள் விலகிட வேண்டுமாயின் உலகோர் எல்லாம் உத்தம மகா ஞானி குருநாதன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உயர் ஞானவழிக்கு வர வேண்டும், வந்திடவே உறுதியாக சிறப்புகள் உண்டாகும்** என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் இராமதேவர்.

–சுபம்–